# The Importance of Peer Groups on Educational Socialization Among Adolescent Students – (Study based on Puttalam South Divisional Schools)

# கட்டிளமைப்பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களின் முக்கியத்துவம்–(புத்தளம் தெற்கு கோட்டப்பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

[1]R.Thahira, [2]A.S.P. Yumna,

[1,2] Department of Education and Child care Faculty of Arts and Culture, Eastern University, Srilanka

rifaideenthahira5@gmail.com,asp.yumna@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் (Abstract of the Study)**

கல்விச் சமூகமயமாக்கம் என்பது கல்வியினூடாக சமூகத்திற்கு ஏற்புடைய தனி நபர்களை உருவாக்குவதாகும். இன்று கட்டிளமைப் பருவத்தினரிடையே போதிய கல்விச் சமூகமயமாக்கலின்மையால் சமூகத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஆகவே கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்கள் எந்தளவில் செல்வாக்கு செலுத்துகின்றனர் என்பதைக் கண்டறிந்து கல்விச்சமூகமயமாக்கலை மேம்படுத்துவதற்கான தீர்வாலோசனைகளையும் விதந்துரைப்புக்களையும் முன்வைப்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது. அந்த வகையில் இவ்வாய்வானது அளவை நிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டு புத்தளம் கல்வி வலயத்தின் தெற்கு கோட்டத்திலுள்ள 5 பாடசாலைகள் இலகு எழுமாற்று மற்றும் வசதி மாதிரியெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, தரம் 9 தொடக்கம் தரம் 13 வரை கல்வி பயிலும் மாணவர்கள் 6:1 எனும் விகிதத்தில் 100 கட்டிளமைப் பருவ மாணவர்களும், 30 ஆசிரியர்களும், 5 அதிபர்களும் மொத்தமாக 135 பேர் இவ் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இங்கு ஆய்வின் சிறப்பு நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு ஆய்வுக் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. வினாக்கொத்தானது வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அதிபர்களுக்கு நேர்காணல் படிவம் வழங்கப்பட்டது. மாதிரிகளிடமிருந்து பெறப்பட்ட அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான தரவுகள் Microsoft Excel மென்பொருள் முறைமை மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக நம்பகமான முடிவுகள் பெறப்பட்டு இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகளுக்கமைய கட்டிளமைப்பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகிறது. ஆனால் அவை பெரும்பாலும் நேர் மறை விளைவுகளை ஏற்படுத்துவதாக உள்ளது. மாணவர்கள் தமது அதிக நேரத்தை சகாக்களுடனே கழிப்பதால் கல்வியறிவு, குழு உணர்வு, பாலியல் கல்வியைப் பெறுவதோடு online game, சினிமா நிகழ்ச்சி போன்றவற்றிலும் தமது


ISBN 978-624-5736-14-0

நேரத்தை வீணடிக்கின்றனர். இதனால் அதிகளவு உள ரீதியான பிரச்சினைகளுக்கும் உட்படுகின்றனர். பாடசாலையில் சமூகத் திறன்களையும், உணர்வுகளையும் மேம்படுத்தும் எந்த செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படாமையால் மாணவர்கள் சிறந்த கல்விச் சமூகமயமப்படுத்தலை பெறத் தவறுவதோடு இள வயதிலேயே போதை, களவு, பொய் போன்ற சமூக முரண்பாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். எனவே சமவயதுக்குழுக்களிடையே சிறந்த கல்விச் சமூகமயமாக்கலை ஏற்படுத்துவதற்கு பாடசாலை மட்டத்தில் தலைமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுத்தல், மாணவர்களுக்கு சவால்களுக்கு முகங்கொடுக்கும் மனப்பாங்கை ஏற்படுத்தல், உரிய வளவாளரைக் கொண்டு உளவியல் ஆலோசனைகளை முன்னெடுக்கும் செயற்றிட்டங்களை ஒழுங்கமைத்தல், பெற்றோர் கூட்டங்களை ஒழுங்குபடுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியம் என்பது பற்றிய விதந்துரைப்புக்களும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

**Keywords:** கல்விச் சமூகமயமாக்கல், கட்டிளமைப் பருவம், சமவயதுக் குழுக்கள், இணைப்பாடவிதானம், ஆற்றல்

### ஆய்வு அறிமுகம்

இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலே சமூகம் பல்வேறு வகையிலும் முன்னேறியுள்ளது. அந்த வகையில் கல்விச் சமூகமயமாக்கல் (Educational Socialization) என்பது மனித சமூகம் நிலைத்து நிற்பதற்கு மிகவும் அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. கல்விச் சமூகமயமாக்கல் என்பது பிறக்கும் பிள்ளை ஒன்றை கல்வியினூடாக அச்சமூகத்திற்கு ஏற்புடையவனாக மாற்றும் செயற்பாடாகும். மனிதன் அடிப்படையில் ஒரு சமூகப் பிராணியாகக் காணப்படுகின்றான். மனிதன் பிறந்து இறக்கும் வரை தாம் வாழும் சமூகத்தில் மிகவும் பின்னிப் பிணைந்து சமூகத்துடன் இணைந்து வாழ்கின்றான். குடும்பத்தில் ஓர் அங்கமாக இருந்து சமூகத்திற்கு ஏற்ப ஒரு மனிதனாக மாற்றுவது அல்லது மாறுவதே கல்விச் சமூகமயமாக்கல் எனப்படும்.

ஒரு மனிதன் அவன் பின்பற்றுகின்ற நெறிமுறைகள், கலாசார நடைமுறைகள், பொருளாதார நடவடிக்கைகள் போன்ற பல விடயங்களை தான் வாழுகின்ற சமூகத்திலிருந்து பின்பற்றுகின்றான். மனிதன் சமூகத்தில் ஒரு அங்கத்தவனாக வாழ்வதற்கான பயிற்சிக்கு காரணம் கல்விச் சமூகமயமாக்கலாகும். அந்த அடிப்படையில் இங்கு பல்வேறுபட்ட கல்விச் சமூகமயமாக்கல் முகவர்கள் செயற்படுகின்றனர். சமூகமயமாக்கல் செயற்பாட்டில் கல்வி 19 ஆம் நூற்றாண்டில் உள் நுழைந்ததால் பல்வேறு கல்விச் செயற்பாடுகள் மூலம் சமூகமயமாக்கல் செயன்முறை விரிவுபடுத்தப்பட்டதன் வாயிலாக கற்பித்தலை ஒரு முறைப்படியமைந்த கொள்கையாக எடுத்துக் கொண்டு கல்வியில் பல மாற்றங்கள் ஏற்படலாயின. கல்வியின் இலக்குகள் தனியாள்மயப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து சமூக நோக்குடையதாக விரிவடையலாயிற்று. எனவே தான் ஊாயசடள ர்ழசவழெ ஊழழடடநல (1988) என்பவர் ஒருவர் மீதான ஏனையோரது நடத்தைகள் அவர் தன்னைப் பற்றியறிவதற்கான கண்ணாடி போல விளங்குகின்றது. (The Looking Glass Self) சமூகமயமாக்கல் என்பது ‘‘சுயத்தின் அபிவிருத்தியாகும்’’ (Development Self).

இவ்விடயமானது சமூக உணர்வுடன் நெருங்கிய தொடர்புடையது. கல்விச் சமூகமயமாக்கத்தின் விளைவாக ஒருவர் தனது சுயம் பற்றிய உணர்வையும், அவர் பற்றிய ஏனையவரது மனப்பாங்கு பற்றிய உணர்வையும் பெற்றுக் கொள்கின்றார் என்று கல்விச் சமூகமயமாக்கல் பற்றி குறிப்பிட்டுள்ளார். கல்விச் சமூகமயமாக்கலை ஏற்படுத்தும் முகவர்களில் குடும்பம், பாடசாலை, தொழில் நிறுவனம், சமய நிறுவனம் போன்றவற்றில் ஒன்றாக விளங்கும் சமவயதுக் குழுக்கள் (Peer Group) மிகவும் முக்கிய வகுப்பாகக் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக கட்டிளமைப் பருவத்தினர் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். சமவயதுக் குழு என்பது ஒரே வயதையுடைய நோக்கத்தாலும், பண்புகளாலும் ஒரே இயல்பைக் கொண்டு ஒத்துச் செல்பவர்களே இவர்களாவர். இவர்கள் தம் பெற்றோரிடம் கற்றுக் கொள்ளாத பல்வேறுபட்ட விடயங்களை சமவயதுக் குழுக்கள் மூலமே பெற்றுக் கொள்கின்றனர். தம் பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளாத பல விடயங்களை தம்மை ஒத்த சமவயதுக் குழுக்களுடனே கலந்தாலோசிக்கின்றனர். எனவே இதன் போது அங்கு கல்விச் சமூகமயமாக்கல் செயன்முறை இடம்பெறுகின்றது. சமவயதுக் குழுக்கள் சிறந்த முறையில் கல்விச் சமூகமயப்படுத்தப்படவில்லையெனில் அந்த சமூகம் சீர்குழைக்கப்பட்டு எதிர்காலத்தில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அமையும்.

கரீம்தீன் (2014) தனிநபர்கள் விதிகளையும், பழக்க வழக்கங்களையும், விழுமியங்கள் மற்றும் நடத்தைகளை அவர்கள் வாழும் சமூக ஒழுங்குகளினூடாக மரபுரிமையாகப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையை சமூகவியலாளர்கள் சமூகமயமாக்கல் என்று குறிப்பிடுகின்றனர். மேலும் சமூகத்துடன் ஒரு தனிநபர் இடைவினை கொள்வதற்கான திறனுள்ளவராக இற்றைப்படுத்துதலும் சமூகம் தனது பொதுவான விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், விதிகள், மரபுகள் மற்றும் மொழி போன்றவற்றை பகிர்ந்து கொள்ளவும் கல்விச் சமூகமயமாக்கல் குவியப்படுத்தப்படுகின்றது. ஒருவர் கற்றுக்கொள்வதற்கும் மனிதனாக விருத்தி செய்து கொள்வதற்குமான வாழ்க்கை நீடித்த செயன்முறையே கல்விச் சமூகமயமாக்கல் ஆகும் என்று குறிப்பிடுகின்றார்.

எனவே கல்வியை வழங்கும் முக்கிய நிறுவனங்களில் பாடசாலை குடும்பத்திற்கு அடுத்த படியாக பிரதான இடத்தை வகிக்கின்றது. எனவே கல்வி என்பது வெறுமனே அறிவை மட்டும் புகட்டாமல் மாணவர்களில் நற்பண்புகளை வளர்த்து சிறந்த சமூகமயப்படுத்தும் கருவியாகவும், சமவயதுக் குழுக்களை ஒன்றிணைக்கும் தளமாகவும் தொழிற்படுகின்றது. சமவயதுக் குழு (Peer Group) என்பது கல்விச் சமூகமயமாக்கலின் மிகவும் பயனுள்ள அம்சமாகும். அத்துடன் சமூக நலன்களைக் கொண்டிருக்கும் ஒரு முதன்மைக் குழுவுமாகும் (Homophily). ஒருவருக்கு குடும்பம் என்னும் சமூக நிறுவனத்திற்கு அடுத்த படியாக பாடசாலையோடு இணைந்ததாக கல்விச் சமூகமயமாக்கலுக்கான அதிக பங்களிப்பைச் செய்யும் ஒரு சமூக நிறுவனமாக இது உள்ளது. சமவயதுக் குழுவானது சம வயதில் உள்ளவர்களைக் கொண்டதொரு குழுவாகும். அல்லது நட்புக் குழுவாகும். சமவயதுக் குழு ஒரு சமூகக் குழுவென்றும் கொள்ளலாம். சமூகக் குழுவானது பல ஆட்களைக் கொண்ட தொகுதியாக இருப்பதுடன் சில பொதுவான இலக்குகளையும், விருப்பங்களையும்,

தூண்டுதல்களையும், மனவெழுச்சிகளையும் கொண்டிருக்கும். அத்துடன் சமூக ஊடாட்டங்களும் இங்கு நிலவும்.

Gidden (1990) Corsara & Eder (1990) என்போரின் கருத்தின் அடிப்படையில் சமவயது உறவுகள் ஒருவருடைய வாழ்கைக் காலம் முழுவதும் முக்கியத்துவமுடையது. சிலர் குழுக்கள் முறையில் நீண்ட கால உறுப்பினராக இருப்பார்கள். சிலர் ஒரு சிலருடனேயே தொடர்ந்து நட்பைப் பேணுவர். சமவயதிலுள்ள குழுக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வேலை செய்யும் இடங்களில் உறுப்பினரின் மனப்பாங்குகள் மற்றும் நடத்தைகளைச் சீர் செய்கின்றனர். https://raisingchildren.net.au/teens/behaviour/peers-friends-trends/peer-influenceஎன்னும் இணையத்தளத்தில் சமவயதுக் குழுக்கள் புத்திசாலித்தனமாக பாடசாலைக்கு செல்லாது வேலைக்குச் சென்று பணம் சம்பாதிப்பது, குடும்பத்தை கவனிப்பது போன்ற மனப்பாங்குகளைக் கொண்டிருப்பர். கூடுதலான ஆய்வுகள் கட்டிளமைப் பருவத்தில் நண்பர்கள் அதிகம் செல்வாக்குக்கு உட்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். அதில் 14 வயதானவர்கள் 18 வயதிற்கு உட்பட்டவர்களில் ஆபத்தான சுய அழிவுள்ள நடத்தைகளில் ஈடுபடுவதற்கு அதிகம் காரணமுள்ளவர்களாக உள்ளனர். இங்கு 18 வயதிற்குட்பட்ட ஒரு இளைஞனோ இல்லது பெண்ணோ தன்னாட்சி பெற்றிருப்பதுடன் அவர்கள் எங்கு செல்ல வேண்டுமென்று விரும்புகின்றாரோ அங்கு செல்ல விரும்புகின்றான். இதன் விளைவாக ஆபத்தான நடத்தைக்குள்ளாக்கப்படுகின்றனர் என இவ் இணையத்தள முகவரியில் பதிவிடப்பட்டுள்ளது.

அவ்வாறே சமவயதுக்குழுக்களால் மாணவர்கள் நேர் மனப்பாங்குகளை பெறும் அதே அளவு எதிர் மனப்பாங்குகளையும் கற்றுக்கொள்கிறார்கள். உதாரணமாக, நேர்மனப்பாங்குகளான கல்வி, குழு முயற்சி, உதவும் மனப்பான்மை, விட்டுக்கொடுப்பு, தலைமைத்துவப் பண்புகள், சட்டத்தை மதித்தல் போன்றவற்றில் ஈடுபட்டு சிறந்த நற்பிரஜைகளாக வளரவும் களவு, கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம், மது பாவணை, கேலி செய்தல், பெரியோரை இகழ்தல், சட்ட திட்டங்களை மதிக்காமை போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடவும் சமவயதுக்குழுக்கள் முக்கிய காரணியாகத் திகழ்கின்றனர்.

எனவே பாடசாலையில் முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளும் ஒரு சமூகத்திற்கு சேவையாற்றும் சிறந்த தனி நபர்களை உருவாக்குகின்றது. அந்த வகையில் மாணவர்கள் தமது நண்பர்களுடன் இணைந்து நேரத்திற்குச் செயற்படும் திறனை வளர்த்தல், தலைமைத்துவத்திற்குக் கட்டுப்படுதல், பெரியோரை மதித்தல், ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல், பாதை ஒழுங்குகளை கற்றுக் கொடுத்தல், போன்ற பல விடயங்களை கற்றுக் கொடுக்கும் தளமாக காணப்படுவதோடு இவ் அனைத்து செயற்பாடுகளும் மாணவர்கள் தம்மை ஒத்த நண்பர்களுடன் இணைந்தே கற்றுக் கொண்டு அதன் படி செயற்படத் தொடங்குகின்றனர். எனவே தான் இஸ்லாமும் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு நல்ல நண்பர்களைத் தெரிவு செய்து கொடுப்பதையே வலியுறுத்தியுள்ளது.

எனவே கல்விச் சமூகமயப்படுத்தலில் சமவயதுக் குழு மிக முக்கிய பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே கல்வியியல் ஆய்வில் மேற்கொள்ளப்படும் **கட்டிளமைப்பருவ**

**மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கத்தில் சமவயதுக் குழுவின் செல்வாக்கு** என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது மிகவும் பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

கட்டிளமைப்பருவ மாணவர்களிடையே கல்விச் சமூகமயமாக்கல் செயன்முறைகள் குறைவடைவதற்கு குடும்பம், வெகுசன ஊடகங்கள், கல்வி முறைமை, சமய தலங்கள், தொழில் நிறுவனம் போன்ற பல்வேறுபட்ட காரணிகள் முக்கியம் பெறுகின்றன. அதில் சமவயதுக்குழுக்களின் செல்வாக்கும் ஒன்றாக உள்ளது. எனவே இது ஆராயப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

**ஆய்வு நோக்கம்**

1. கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களின் முக்கியத்துவத்தைக் கண்டறிதல்.
2. கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுவினரால் ஏற்படும் நன்மை, தீமைகளைக் கண்டறிதல்
3. கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலை மேம்படுத்துவதற்கான வழிகாட்டல்களையும், தீர்வாலோசனைகளையும் முன்வைத்தல்.

**ஆய்வு முறையியல்**

விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வு முறை இவ்வாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவுகளை சேகரிப்பதற்காக ஆய்வுக்கருவிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட ஆய்வுக்கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் என்பன அமைந்துள்ளன. இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதியான முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 5 பாடசாலைகளிலிருந்து 600 கட்டிளமைப்பருவ மாணவர்கள் 6:1 எனும் விகிதத்தில் 100 மாணவர்களும், 30 ஆசிரியர்களும் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. அவ்வாறே 5 பாடசாலை அதிபர்களிடமிருந்து நேர்காணலின் மூலம் தரவுகள் பெறப்பட்டன. அந்த அடிப்படையில் 135 மாதிரிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் Microsoft Excel மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு இவை முப்பரிமாண படங்கள், சலாகை வரைபுகள், அட்டவணையாக்கம் மூலம் காட்டப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட்டு கலந்துரையாடப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

**அட்டவணை 1 மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரம்.**

| பாடசாலையின் பெயர் | பாடசாலை வகை | மாணவர் எண்ணிக்கை | ஆசிரியர் எண்ணிக்கை | அதிபர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலயம் | 1C | 35 | 9 | 1 |
| தாராக் குடிவில்லு முஸ்லிம் மகா வித்தியாலயம் | 1C | 15 | 3 | 1 |
| உடப்பு தமிழ் மகா வித்தியாலயம் | 1C | 20 | 7 | 1 |
| கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயம் | 1C | 25 | 8 | 1 |
| முந்தல் தமிழ் மகா வித்தியாலயம் | Type II | 5 | 3 | 1 |
| மொத்த எண்ணிக்கை | | 100 | 30 | 5 |

**இலக்கிய மீளாய்வு (literature review)**

மேயர் (1986) என்பவர் தன் ஆய்வில் இளமை பருவங்களில் தனிநபர்கள் தங்கள் எதிர்கால வாய்ப்புக்களை ஆராயத் தொடங்குகின்றனர். இளமைப் பருவத்தில் கல்வித் தேர்வுகள், மற்றும் கல்வி சார்ந்த செயற்பாடுகள், முக்கிய தொழிற் பயிற்சிகள் போன்றன முக்கிய பங்கு வகிக்கின்றன. இளமைப் பருவத்தினர் தங்கள் அடையாளங்களை நிர்வகிக்கவும் தங்களது எதிர்கால வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதற்குமான தேர்வுகளை எடுக்கவும் வாழ்க்கையின் ஒரு முக்கிய கட்டமாக இது காணப்படுவதாகக் கூறியுள்ளார்.

சாதாரணமாக 09-20 வயது வரையிலான காலத்தை இளமைப் பருவம் அல்லது கட்டிளமைப் பருவம் எனக் குறிப்பிடலாம். இப்பருவத்தில் உடல் ரீதியான மாற்றங்களும், நடத்தை ரீதியான மாற்றங்களும் ஏற்படும். இளமைப் பருவம் தொடர்பில் பல்வேறு அறிஞர்கள் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளனர். ‘‘கட்டிளமைப் பருவம் என்பது வாலிப வயது அனுபவங்களை நுகர்வதற்கான உடல் அமைப்பினைப் பெற்றுள்ள பருவமாகும். இது வயது வந்தோரைப் போன்று உடல் அல்லது சிந்தனை தொடர்பான உறுதியற்ற தன்மையைப் பெற்றுள்ள காலமாகும்.’’

மேலும் மற்றொரு வகையில் குறிப்பிடுவதானால் இளமைப் பருவம் என்பது ‘‘பிள்ளை பருவத்திற்கும் வாலிபப் பருவத்திற்குமிடைப்பட்ட காலமாகும்.’’ இதனை மூன்று பிரிவாக வகைப்படுத்தலாம்.


ISBN 978-624-5736-14-0

1. 09-13 இடைப்பட்ட வயது - முன் கட்டிளமைப் பருவம்.
2. 14-16 இடைப்பட்ட வயது – கட்டிளமைப் பருவம்
3. 17-20 இடைப்பட்ட வயது - பின் கட்டிளமைப் பருவம் போன்றனவாகும்.

*எரிக்சன் தன் கோட்பாட்டில் 13 வயது முதல் 19 வயது வரையுள்ள கட்டிளமைப் பருவம் இதுவாகும். இப்பருவத்தினரின் பிரதான பணி தமது அடையாள நிலையினை அடைதலாகும். பிள்ளையானது தனது பலம், பலவீனம், இலக்கு, தொழில், பால் வகிபங்கு எனத் தனது இயல்புகளைப் பற்றிய அறிவையும் விளக்கத்தினையும் பெறுகின்றது. இதனை விளக்க எரிக்சன் **அடையாள நெருக்கடி** என்ற பதத்தினை விஷேடமாகப் பயன்படுத்துகின்றார். இப்பருவத்து பிள்ளையிடத்து உடலியல் மாற்றங்களும், மனவெழுச்சி சார் விளைவுகளும் ஏற்படுவதனால், பல நெருக்கடிகளையும், குழப்பங்களையும் எதிர் கொள்வர். எனவே, இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண்பது அவசியமாகும். இல்லையேல் பிள்ளையினது சுய அடையாளம் கரைந்து அவனை நெறிபிறழ்வானவனாக மாற்றி விடும் என்கின்றார்.* தொலைக் காட்சி வளரும் நாட்டில் இளம் நுகர்வோர் சமூகமயமாக்கலில் ஒரு நேர்மறையான செல்வாக்கைக் கொண்டுள்ளது. இளைஞர்களின் நுகர்வு தொடர்பான அறிவாற்றல், அணுகு முறை மற்றும் மதிப்புகள் தொலை தொடர்பு சாதனங்களால் கடுமையாகப் பாதிப்படைகின்றன. மேலும் நுகர்வு சம்பந்தப்பட்ட அறிவாற்றல் மற்றும் மதிப்புகளால் அவற்றின் நுகர்வு தொடர்பான அணுகு முறை பாதிக்கப்படுகின்றது. சமூக கட்டமைப்பு மாறிகள் பெற்றோர் கட்டுப்பாடு, சமவயதுக் குழுவின் தாக்கங்கள், பாலின வேறுபாடுகள் மற்றும் சமூக வர்க்க வேறுபாடுகள் இளைஞர்களின் சமூகமயமாக்கல் செயன்முறை மீது தாக்கம் செலுத்துகின்றது (Ridhwanul haq and Rahman, 2015).

ஆஷ்மோர் (2002) என்பவரின் ஆய்வின் முடிவின் படி சமூக விஞ்ஞானிகள் நீண்ட காலமாக தம்மை ஏனையவர்களிடமிருந்து வேறுபடுத்தி அடையாளம் காணக்கூடிய ஒரு பிரிவாகவும் பெயரிடப்பட்ட சமூக வகைகளாகவும் சமயவயதுக் குழுக்களை அடையாளம் காட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. குடும்பத்தின் பாத்திரமானது குழந்தைப் பருவத்திலிருந்தே வலியுறுத்தப்படுகின்றது. அதே வேளை குழந்தை பருவத்தில் வளர்ச்சியடையும் போது சமவயதுக் குழுக்களின் வளர்ச்சி முக்கியம் பெறுகின்றது. பெற்றோர்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் இடையில் உள்ள உயர் மட்ட உறவுகளைப் போலல்லாமல் அது மிக அன்னியோன்யமானது. சமவயதுக் குழுக்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்தும், சமூக ஒப்பீடுகள், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளல் போன்றவற்றுக்கான உள்ளடக்கத்தை வழங்குகின்றது. மேலும் இளம் தலைமுறையினர் தமது அடையாளங்களைக் கட்டியெழுப்பவும் படிப்படியாக தம் பெற்றோரிடமிருந்து சுதந்திரமானவர்களாகவும் மாறுகிறார்கள். இளம்பருவத்தினரின் உறவுமுறைக் காலப்பகுதியில் சமவயதுக் குழுக்களிடையே குறைந்தபட்சம் 3 மாற்றங்கள் ஏற்படுகின்றன. 1) சமவயது உறவுகளின் உறுதிப்பாடு 2) சர்க்கர உபகூலங்களை வெளிப்படுத்தல். 3) காதல் மற்றும் பாலியல் சார்ந்த உறவுகளின் தோற்றம் அல்லது வெளிப்பாடு போன்றனவாகும் என குறிப்பிடுகின்றார் (Brown, Dolcini, and Leventhal ,1997) .

Allen (1989) என்பவரின் ஆய்வில் கட்டிளமைப் பருவ மாணவர்களின் வளர்ச்சியில் சமவயதுக் குழுக்கள் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன. மேலும் நமது சமூதாயத்தில் ஆண்கள் மற்றும் பெண்களின் பாத்திரங்களை கட்டிளமைப் பருவத்தினர் எவ்வாறு கருதுகிறார்கள் என்பதில் வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பாலின பாகுபாடுகள் மற்றும் ஒரே மாதிரியான முறைகளைத் தொடர்ந்து நிறுவுதல் பெரும்பாலும் வீட்டில் தொடங்கி பின்னர் மேலும் குழுவால் வலுப்படுத்தப்படுகின்றது. அத்துடன் பெற்றோர் பள்ளிகள் மற்றும் ஊடகங்களாலும் வலுபடுத்தப்படுகின்றது. Dirant (2002) என்பவரின் ஆய்வின் முடிவில் குழந்தைகள் வீட்டுச் சூழலிருந்து நண்பர்கள் மற்றும் பள்ளியின் பெரிய உலகத்திற்குச் செல்லும் போது அவர்களது எண்ணங்கள் மற்றும் நம்பிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்கள் சுற்றியுள்ளவர்களால் வலுவூட்டப்படுகின்றன. ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் பொருத்தமான நடத்தை ஊடகங்கள் மூலம் வலுபடுத்தப்படுகின்றது. எனவே பிள்ளை இவ்வனைத்து சமூகமயமாதல் முகவர்கள் அனைவரிடமிருந்தும் பாலின ‘ஸ்டீரியோபியட்’ எனும் நடத்தையை கற்றுக் கொள்கிறார்கள் எனக் குறிப்பிடுகின்றார். Amber Taylor (2007) என்பவர் சமவயதுக் குழு உள்ளடக்கம் மிகவும் பயனுள்ளதாக அமையும் என கூறப்படுகின்றது. இதில் சமவயதுக் குழுக்களின் நேரடி மற்றும் மறைமுக தொடர்புகள் கணிசமான அளவு குறைக்கப்பட்டு மேம்பட்ட மனநலத்திற்கும் சமூகமயமாக்கலுக்கும் வழிகாட்டுவதற்கு உதவுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

பிரவுன் (1987) மேற்கொண்ட ஆய்வில் சமவயதுக் குழுக்கள் சுய அடையாளங் காட்டலில் முக்கியதாரராகத் திகழ்வதோடு பொறாமை மற்றும் துர் நடத்தைகளில் குறிப்பிடத்தக்களவு சுய மதிப்பீட்டைக் காட்டியுள்ளதாக கண்டறிந்துள்ளனர். இங்கு போதைப் பொருள் பாவனை மற்றும் மருந்துகள், துஷ்பிரயோகம் போன்றவற்றில் இவர்களது அழுத்தம் அதிகரித்துள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. எனவே அதிகமாக பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் போதைப் பாவனை அதிகரிப்பில் சமவயதுக் குழுக்களின் செல்வாக்கு அதிகமாக உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகக் காணப்படுகின்றது. ஆஷ்மோர் (2002) மேற்கொண்ட ஆய்வில் கட்டிளமைப் பருவ சமவயதுக் குழுக்கள் அதிகமாக அல்கஹோல்களைப் பயன்படுத்துவதைக் கண்டுள்ளனர். இதனால் அவர்களது மூளையில் பாதிப்புக்கள் ஏற்பட்டதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இது குறிப்பாக மிச்சிக்கன் ஆய்வில் 900 மாணவர்களை அதாவது 10-12 வகுப்பு மாணவர்களான உயர் நிலைப் பள்ளி மாணவர்களை மையமாகக் கொண்டு மேற்கொண்ட ஆய்விலே கண்டறியப்பட்டுள்ளது.


**பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

இவ்வாய்வானது பொது நோக்கத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கங்களுக்கங்களினடிப்படையில் உருவாக்கப்பட்ட ஆய்வு வினாக்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்கொத்து, நேர்காணல், மற்றும் அவதானம் போன்ற ஆய்வுக் கருவிகளின் துணையுடன் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பெறப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் அடிப்படையிலும் பண்பு ரீதியிலும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பெறப்பட்ட தரவுகள் Microsoft Exel முறையைப் பயன்படுத்தி சலாகை வரைபுகள், வரைபுகள், முப்பரிமாண வரைபடம் மூலம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.


ISBN 978-624-5736-14-0

**கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களின் முக்கியத்துவத்தைக் கண்டறிதல்**

Soosan (2009) என்பவரின் ஆய்வின் முடிவாக குழந்தைகள் மீதான சமவயதுக் குழுக்களின் செல்வாக்கும் பாலின பாத்திரங்களுக்கான சமூகமயமாக்கலில் சிறுவயதிலிருந்தே குழந்தைகள் நகர்வதைப் போல வயது வந்தோருக்கான சுற்றுச் சூழல் தாக்கங்கள் பல உள்ளன. இதில் முக்கியமாக சமவயதுக்குழுக்களின் தாக்கங்கள் அடங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த அடிப்படையில் கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக்குழுக்களின் செல்வாக்கைக் கண்டறியுமுகமாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. அதனடிப்படையில் அவர்களால் வழங்கப்பட்ட பதில்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.





***வரைபடம் 1 சமவயதுக் குழுக்களின் செல்வாக்கு***

இங்கு அதிகமான மாணவர்கள் சமவயதுக் குழுக்களையே தெரிவு செய்துள்ளனர். குறிப்பாக 46 சதவீதமான மாணவர்கள் இதனைத் தெரிவு செய்துள்ளனர். 30 சதவீதமான ஆசிரியர்களும் 28 சதவீதமான மாணவர்களும் பாடசாலையைத் தெரிவு செய்துள்ளனர். குறிப்பாக 30 சதவீதமான ஆசிரியர்கள் சமஅளவில் பாடசாலையையும், சமவயதுக் குழுக்களையும் தெரிவு செய்துள்ளனர்.

**அதிக நேரத்தை செலவிடுதல்**

Abdhul Saththar, Allahdino Abro, and Roshan Ali Mugheri (2012) என்பவர்களால் பகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி, பிள்ளைகள் தங்களுடைய பெற்றாரின் இடைவினை குறையும் போது வெளி இடங்களில் அன்பைத் தேட முயற்சிக்கின்றனர்.




***வரைபடம் 2 அதிக நேரம் செலவிடுதல்***


ISBN 978-624-5736-14-0

இதனால் உடன்பாடற்ற நட்பு வட்டாரங்கள் உருவெடுக்க ஆரம்பிக்கின்றன. இவ்வாறான பிள்ளைகள் வெளிப்படையாக பலமானவர்களாகவும், உள ரீதியாக பலவீனமானவர்களாகவும் காணப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

அந்த அடிப்படையில் கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக்குழுக்களின் செல்வாக்கைக் கண்டறியும் முகமாக அவர்கள் யாருடன் அதிக நேரத்தை செலவிடுவது தொடர்பில் கண்டறியும் பொருட்டு மாணவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. அதில் மாணவர்களால் அளிக்கப்பட்ட துலங்கல்களை மேலுள்ள சலாகை வரைபு எடுத்துக்காட்டுகின்றது. மேற்படி மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளுக்கமைய 48 சதவீதமான மாணவர்கள் தாம் அதிகமான நேரத்தை தம்முடைய வகுப்பு நண்பர்களுடனேயே செலவழிப்பதாக பதிலளித்தனர். அதில் 38 சதவீதம் ஆண் மாணவர்களும் 10 சதவீதம் பெண் மாணவர்களும் உள்ளடங்குகின்றனர். 41 சதவீதமான மாணவர்களே பெற்றோருடன் செலவழிப்பதாக பதிலளித்தனர். அதில் 6 சதவீதமான ஆண்களும் 35 சதவீதமான பெண்களும் காணப்படுகின்றனர்.

**சமவயதுக் குழுவினரால் கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் ஏற்படும் நன்மை தீமைகளைக் கண்டறிதல்**

சமவயதுக் குழுவினரால் கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் ஏற்படும் நன்மைகளைக் கண்டறிவதற்காக வழங்கப்பட்ட தூண்டலுக்கு மாணவர்களால் வழங்கப்பட்ட துலங்கல்கள் பின்வருமாறு அமைந்தது.

**கல்வி சார் நன்மைகள்**

https://teens.lovetoknow.com/ The Extent to which peer groups Affect Academic performance என்னும் இணையத்தள முகவரியில் சமவயதுக் குழுக்கள் ஒருவருடன் ஒருவர் பழகும் போது சாதகமான முறையிலும் பாதகமான முறையிலும் பாதிக்கப்படலாம். இவர்களுடைய நடத்தைகளில் சமவயதுக்குழு அதிக செல்வாக்கைச் செலுத்துகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் கட்டிளமைப் பருவ மாணவர்கள் தமது சமவயது நண்பர்களுடன் பழகுவதால் பெறும் கல்விசார் நன்மைகள் தொடர்பில் கண்டறியும் பொருட்டு மாணவர்களிடமும் ஆசிரியர்களிடமும் வினவப்பட்ட போது அவர்களிடமிருந்து பெறப்பட்ட துலங்கல்களை அட்டவணை 2 காட்டுகின்றது.

**அட்டவணை 2 சமவயதுக் குழுவினரால் கட்டிளமைப் பருவ மாணவர்களிடையே ஏற்படும் கற்றல் சார் நன்மைகள் பற்றிய விபரம்**


| நன்மைகள் | பதிலளித்த ஆசிரியர்களின் சதவீதம் | பதிலளித்த மாணவர்களின் சதவீதம் |
|---|---|---|
| கல்வியறிவு | 34% | 39% |
| குழு உணர்வு | 32% | 30% |
| கற்றல் ஊக்கம் | 14% | 12% |
| தெரியாததை தெரிந்து கொள்ளல் | 8% | 7% |
| புதியவற்றை கண்டறிதல் | 5% | 2% |
| புத்தாக்க சிந்தனை | 1% | 1% |
| பாலியல் கல்வி | 7% | 9% |

**மூலம்: ஆய்வாளனால் தயாரிக்கப்பட்டது.**

அட்டவணை 2 இன் படி கட்டிளமைப் பருவ மாணவர்கள் தமது சகாக்களுடன் பழகுவதால் பெறும் கல்வி சார் நன்மைகளில் அதிகமாக கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதாக 49 சதவீதமான மாணவர்கள் பதிலளித்தனர். அதே வேளை குழு உணர்வினை அதிகமாகப் பெறுவதாக 39 சதவீதமானோர் தெரிவித்துள்ளனர். நண்பர்களுடன் சேர்வதால் தாமும் கற்க வேண்டும் என்ற ஊக்கத்தைப் பெறுவதாக 42 சதவீதமான மாணவர்கள் தெரிவித்தனர். எனினும் புதியவற்றை கண்டறிவதும், புத்தாக்க சிந்னையை வளர்த்துக் கொள்வதும் மிகவும் குறைந்தளவிலேயாகும் என்பது ஆய்வின் போது கண்டறியப்பட்டது.

மேலும் இது தொடர்பில் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கட்டிளமைப் பருவ மாணவர்கள் தமது சகாக்களுடன் பழகுவதால் கல்வியறிவைப் பெற்றுக்கொள்வதாக 39 சதவீதமானோரும், குழு உணர்வைப் பெறுவதாக 30 சதவீதமானோரும் பதிலளித்தனர். அதே வேளை பாலியல் கல்வியை பெற்றுக் கொள்வதாக 9 சதவீதமானவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் புதியவற்றைக் கண்டறிவது குறைவு எனவும் 2 வீதமானோர் பதிலளித்தனர்.

கட்டிளமைப் பருவ மாணவர்கள் தம்மை ஒத்த வயதுக் குழுக்களுடன் சேர்வதால் பல பாதிப்புக்களையும் அடைகின்றனர் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அந்த வகையில் கட்டிளமைப் பருவ மாணவர்களிடம் நீர் உமது நண்பர்களுடன் பழகுவதால் பெறும் அசௌகரியங்கள் யாவை? என வினவப்பட்ட போது அவர்களால் அளிக்கப்பட்ட துலங்கல்களை பின்வரும் உரு எடுத்துக்காட்டுகின்றது.




***வரைபடம் 3 சமவயதுக் குழுக்களால் இடம்பெறும் பிரச்சினைகள்***

மேற்படி உருவில் காட்டப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் 20 சதவீதமான கட்டிளமைப் பருவ மாணவர்கள் தாம் தமது சகாக்கள் மூலம் உடலியல் ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்வதாக பதிலளித்தனர். அதே வேளை 10 சதவீதமான மாணவர்கள் தாம் கற்றலில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்வதாக பதிலளித்தனர். மேலும் அதிகமான மாணவர்கள் குறிப்பாக 70 சதவீதமான மாணவர்கள் உளவியல் சார் பிரச்சினைகளை எதிர்கொள்வதாக பதிலளித்தனர்.

**முடிவுகளும் கலந்துரையாடலும்**

**கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களின் செல்வாக்கைக் கண்டறிதல்**

கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களின் செல்வாக்கு அதிகமாக காணப்படுகிறது. ஆசிரியர்களிடம் வினவிய போது 30 சதவீதமானோர் சமவயதுக்குழுக்களையே தெரிவு செய்துள்ளனர். மாணவர்கள் குழுவாக இணைந்து செயற்படும் ஒரு களத்தை வகுப்பறை உருவாக்கினாலும் மாணவர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதால் அவர்களிடையே கல்விச்சமூகமயமாக்கல் விருத்தி பெறுவதாக அவர்கள் குறிப்பிட்டனர். மாணவர்களில் அதிகமானோர் அதாவது 46 சதவீதமானோர் சமவயதுக்குழுக்களையே தெரிவு செய்துள்ளனர். எனவே கட்டிளமைப்பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக்குழுக்களின் செல்வாக்கு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

அதிக நேரத்தை செலவிடுதல் - அதிகமான மாணவர்கள் தமது அதிக நேரத்தை தம்முடைய நண்பர்களுடனேயே செலவிடுவதாக குறிப்பிட்டனர். இங்கு பெண் மாணவர்களில் அதிகமானோர் பெற்றோரையே தெரிவு செய்துள்ளனர். மாணவர்கள் பாடசாலையிலும் அது தவிர்ந்த ஏனைய பிற இடங்களிலும் நண்பர்களுடனே இணைந்து செயற்படுவதாக பதிலளித்தனர். அதில் கற்றல் செயற்பாடுகள், விளையாட்டு, சமய வழிபாடுகள் போன்றவற்றில் நண்பர்களுடன் இணைந்து செயற்படுவதாகக் குறிப்பிட்ட அதே வேளை சினிமா பாடல்கள் கேட்டல், online game களில் அதிகமாக ஈடுபடுவதாகவும் நண்பர்களுடன் இணைந்து குளிக்கச் செல்லல், சுற்றுலா செல்வதாகவும் பதிலளித்தனர்.


ISBN 978-624-5736-14-0

Dr. Pete Johnson (1998) 13 -19 ற்கு இடைப்பட்ட வயதையுடைய 200 கட்டிளமைப் பருவ பிள்ளைகளை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இவர்களில் 70 சதவீதத்தினர் ஒரு நாளில் அதிக நேரத்தை ஊடகங்களில் கழிக்கின்றனர். 15 நிமிடத்திற்கு ஒரு முறை முக நூலை பயன்படுத்துகின்றனர். கட்டிளமைப் பருவத்தினர் வளர்ந்தவர்களின் விடயங்களை முக்கியமாக பாலியல் சார் விடயங்களை அறிவதில் மிகவும் ஆர்வம் கொள்ளவும், உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய பாட்டுக்களையும் படங்களையும் பார்ப்பதற்கு சமூக ஊடகங்களில் யூடியுப் அதிகளவில் பங்களிப்புச் செய்கின்றன என்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் இவர்களின் கற்றல் சிந்தனைகள் மாறுபடுகின்றன. அதுமட்டுமல்லாமல் தற்பொழுது அநேகமாக வளர்ந்தவர்களின் உள்ளடக்கங்களைக் கொண்டு video games தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றை பிள்ளைகள் விளையாடுவதால் சிந்தனைகள் திசை திருப்பப்படுகின்றன. மேற்படி ஆய்வின் முடிவின் படி இங்கு மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் திருப்தி முழுமையான அன்பு, அரவணைப்பு, குடும்ப சூழல், கட்டுப்பாடு, கலாசாரம் போன்ற காரணிகள் தாக்கம் செலுத்துவதாக கண்டறியப்பட்டது. ஆகவே தான் பெண் மாணவர்கள் தமது அதிக நேரத்தை பெற்றோருடன் செலவழிப்பதற்கு விரும்புவதாக குறிப்பிட்டனர். ஆண் மாணவர்கள் தமது பருவ வயதை அடைந்ததுமே பெற்றோரின் கட்டுக்கோப்பிலிருந்து விடுபட்டு சுயமாக செயற்பட விரும்புவதால் அவர்கள் தமது அதிக நேரத்தை நண்பர்களுடனேயே செலவழிக்க விரும்புகின்றனர். இதன் போது மாணவர்கள் நல்ல விடயங்களைப் பெறும் அதே சந்தர்ப்பத்தில் தீய விடயங்களையும் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. குறிப்பாக ஆபாசப்படங்கள், பாடல்கள், வீண் கேலிக்கைகள், போதைப் பொருள் பாவணை, களவு, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற செயல்களில் ஈடுபடுவதை நாம் குறிப்பிடலாம். ஆகவே இங்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் நண்பர்களின் தொடர்பை சிறந்த முறையில் பேணுவதற்கு கவனம் செலுத்துவதோடு குழுவாக இணைத்து கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வழிப்படுத்துவது அவர்களின் நேரத்தை பயனுள்ள வழிகளில் கழிப்பதற்கு உதவுவதாக அமையும்.

எனவே மேற்படியான முடிவை Dirant (2002) என்பவரின் ஆய்வு முடிவு நிரூபிப்பதாக உள்ளது. குடும்பம் மற்றும் பள்ளி போன்ற சமூகமயமாக்கலின் இதர முகவர்கள் போலல்லாமல் சமமவயதுக் குழுக்கள் பெரியவர்களை நேரடி கண்காணிப்பில் இருந்து தப்பிக்க வைக்கின்றன. சகலரிடத்திலிருந்தும் குழந்தைகள் தங்களது சொந்த உறவுகளை உருவாக்கக் கற்றுக் கொள்கின்றார்கள். மேலும் ஆடைகளும், பிரபலமான இசைகளும் மருந்துகள், மற்றும் பாலியல் போன்ற அனுமதியற்ற குழந்தைகள் போன்ற குழந்தைகளுடன் பகிர்ந்து கொள்ளாத ஆர்வங்களைப் பற்றி பேசுவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றனர்.

### சமவயதுக் குழுவினரால் கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் ஏற்படும் நன்மை தீமைகளைக் கண்டறிதல்

இவ்விடயம் தொடர்பில் பெறப்பட்ட முடிவுகளுக்கமைய மாணவர்கள் அதிக நன்மைகளையே தமது சமவயதுக்குழுக்கள் மூலம் பெறுகின்றனர் எனக் கூற முடியாது. மாறாக நேர் மறை விளைவுகள் இரண்டும் சம அளவில் பாதிக்கின்றன. இருப்பினும் மாணவர்களில் 49 சதவீதமானோர் கல்வியறிவு பெறுவதாகவும் 39 சதவீதமானோர் குழு உணர்வு பெறுவதாகவும்

பதிலளித்தனர். ஆகவே அதிக மாணவர்கள் கூட்டாகச் செயற்படுவதன் மூலம் கல்வி மற்றும் குழுவுணர்வைப் பெறுகின்றனர் என்பதை அறியலாம். மேலும் பாலியல் தொடர்பிலான அறிவையும் சகாக்கள் மூலமே அறிந்து கொள்கின்றனர். எனினும் புதிய விடயங்களைக் கண்டறிவதிலும் புத்தாக்க சிந்தனைகளைப் பெறுவதிலும் குறைவான பயனையே பெறுகின்றனர் என்றும் தெரிவித்தனர். ஆசிரியர்களும் இதே விடயத்தையே தெரிவித்தனர். எனவே ஆசிரியர் மாணவர்களை சகாக்களுடன் இணைந்து வெற்றிகரமான மற்றும் முழுமையான கற்றலில் ஈடுபடுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது அவசியமாகும்.

மேற்படி என்து ஆய்வின் முடிவை இவ்வாய்வின் முடிவு நிரூபிப்பதாக அமைந்துள்ளது. Gardner (2009) சுய மதிப்பீட்டைக் கூட்டு ஒத்துழைப்புடன் இணைந்து செயல்படுவதன் மூலம் மாணவர்களுக்கு நன்மைகளை அதிகரிக்கின்றது. மேலும் இது கற்றல் விளைவுகளை திறம்பட செயல்படுத்தவும் உதவுகின்றது. மாணவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதில் மற்றும் திறனாய்வு பயிற்சிகளில் இருந்து, கற்றல் கருத்துக்களை சேகரித்தல் மற்றும் விநியோகம் செய்தல் மற்றும் அவர்களின் தனிப்பட்ட பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காணவும் உதவுகின்றது.

**சமவயதுக் குழுக்களால் இடம்பெறும் பாதிப்புக்கள்**

சமவயதுக்குழுக்கள் கட்டிளமைப் பருவ மாணவர்களில் சம அளவில் நேர் மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்ற அடிப்படையில் மாணவர்களில் 70 சதவீதமானோர் தமது நண்பர்கள் மூலம் உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாவதாக தெரிவித்தனர். அந்த வகையில் தாழ்வுச் சிக்கலை அதிகமாக எதிர் கொள்வதாக 77 சதவீதமான மாணவர்கள் பதிலளித்தனர். பொதுவாக கட்டிளமைப் பருவ மாணவர்களில் உடலியல் நடத்தை மாற்றங்கள் ஏற்படுவதால் ஆளுமையிலும் விருத்தி ஏற்படுகின்றது. அந்த அடிப்படையில் மாணவர்கள் உடல் ரீதியில் அழகு பெறுதல், ஆளுமையில் விருத்தி ஏற்படுதல் காரணமாக சில மாணவர்கள் தம்மைத் தாமே தாழ்த்தி சிந்திப்பதால் அங்கு மாணவர்களிடையே தாழ்வு மனப்பான்மை ஏற்படுகின்றதாகவும் குறிப்பிட்டனர். அடுத்தாக தாம் அதிகமாக தனிமைப்படுத்தப்படுதல், ஒதுக்கி வைக்கப்படுவதாகவும் தெரிவித்தமைக்கான காரணங்களை வினவிய போது தாம் நிறத்தில் குறைவாக இருப்பதாலும், பொருளாதார ரீதியில் தாழ்வாக இருப்பதாலும் கற்றலில் பின்னடைவாக இருப்பதாலும் தனிமைப்படுத்தப்படுவதாகவும் ஒதுக்கி வைக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் தலைமைத்துவப் பொறுப்புக்களை ஏற்கும் போதும், ஏனைய பொறுப்புக்களை ஏற்கும் போதும் மாணவர்களால் பாரபட்சத்திற்குட்படுபவர்களாக காணப்படுவதாகவும் பதிலளித்தனர். தம்முடைய நண்பர்களிடமும் தமது விருப்பத்திற்குரியவர்களிடமும் நல்ல முறையில் நடந்து கொள்வதாகவும் ஏனையோரை புறக்கணிப்பதாகவும் பதிலளிக்கப்பட்டது. ஆகவே அதிகமான மாணவர்கள் தமது நண்பர்கள் மூலம் உளவியல் ரீதியான பிரச்சினைகளையே எதிர்கொள்கின்றனர் என்ற விடயத்தை இதனூடாக அறிந்து கொள்ள இயலும். புல்னிங் எக்கெல்ஸ் (1993) என்பவரின் கருத்துப்படி இளம் பருவ வயதினரை ஏற்றுக் கொள்வதற்கும் புகழ்பெற்றுக் கொள்வதற்கும் அதிக கவனம் செலுத்துவதுடன் அவர்களது சகாக்களுக்கு அடிக்கடி ஆலோசனையும் ஆறுதலையும் அளிப்பவராக இவர்கள் காணப்படுகின்றனர் எனக்


ISBN 978-624-5736-14-0

குறிப்பிட்டுள்ளார். இதில் கட்டிளமைப்பருவ மாணவர்களின் முக்கிய பண்புகளில் ஒன்றாக தலைமைத்துவம் உள்ளதாக இவர் தன் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்

உடலியல் பிரச்சினைகள் - மாணவர்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக உடலியல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. மாணவர்களில் 20 வீதமானோர் உடலியல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டனர். அதாவது மாணவர்கள் ஒருவருக்கொருவர் அடித்தல், தகாத வார்தைப் பிரயோகம், பொருட்களை சேதப்படுத்தல் (கொப்பி, புத்தகங்களை வீசுதல், கிழித்தல்) போன்றன இடம்பெறுவதாக ஆசிரியர்களும் மாணவர்களும் குறிப்பிட்டனர். இப் பிரச்சினை தொடர்பில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குவதாகவும், அதிபரிடம் ஒப்படைத்து பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவினூடாக தீர்வு காணுவதாகவும் தெரிவித்தார்.

கல்வி சார் பிரச்சினை - மாணவர்கள் கற்கும் மாணவர்களைக் கேலி செய்தல், கூடிக் கதைத்தல், சத்தமிடுதல், திசை திருப்புதல், நூலகத்தில் புத்தகங்களை ஒழித்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்வதால் கற்றல் சார் பிரச்சினைகளை எதிர்கொள்வதாக தெரிவித்தனர். எனவே அதிக மாணவர்கள் தமது சகாக்கள் மூலம் உள ரீதியிலான பாதிப்புக்களையே எதிர்கொள்கின்றனர் என்பதை ஆய்வின் போது அறிய முடிந்தது.

**பரிந்துரைகள்**

- கட்டிளமைப்பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக்குழுக்களின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படினும் அதை மென் மேலும் விருத்தி செய்வதற்கான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பது அவசியமாகும்.
- மாணவர்கள் தமது அதிக நேரத்தை நண்பர்களுடனேயே செலவழிப்பதால் அதைப் பயனுள்ள வழிகளில் கழிப்பதற்கும் தொலைத் தொடர்பு சாதனங்களில் Online Game, சினிமா நிகழ்ச்சிகளில் அதிகமாக ஈடுபடுவதை தவிர்க்கும் முகமாகவும் கற்றல் செயற்பாடுகளையும், பயிற்சிகளையும் குழுவாக இணைந்து செய்வதற்கு ஊக்குவிப்பது அவசியமாகும். இது அவர்களுடைய மனதை கற்றலில் திசை திருப்புவதாகவும் மாணவர்களுடன் இணைந்து செயற்படும் போது அதிக தகவல்களைப் பெறக் கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தும்.
- மாணவர்களுக்கு நேரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அதனை பயனுள்ள வகையில் கழிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கும் போது மாணவர்கள் நேரத்தை பயனுள்ள வகையில் கழிக்க வேண்டும் என்ற ஊக்கலைப் பெறுவர்.
- குழு உணர்வையும், கற்றல் ஊக்கத்தையும் மாணவர்களிடையே மேலும் அதிகரிப்பதற்கான செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்வதோடு வகுப்பறையில் மாணவர்கள் இணைந்து கற்பதற்கான புதிய நுட்பங்களைக் கையாளுதல் வேண்டும்.
- ஆசிரியர்கள் மாணவர்களிடையே புத்தாக்க சிந்தனையை ஏற்படுத்தும் வகையிலான வேலைத்திட்டங்களை வழங்குதல் மாணவர்களிடையே புத்தாக்க சிந்தனையை விருத்தி செய்வதாக அமையும்.

- ஆசிரியர் வகுப்பறையில் குழுவிலிருந்து விலகி ஒதுங்கியிருக்கும் மாணவர்களையும் குழுவுடன் இணைந்து செயற்படுவதற்கான நுட்பங்களைக் கையாள்வது அவசியம். குழுவுடன் இணைந்து செயலாற்றுவதன் அவசியத்தையும், அதனால் ஏற்படக் கூடிய நன்மைகளையும் ஆசிரியர் எடுத்துரைக்கும் போது அவர்களில் குழு உணர்வு விருத்தி செய்யப்படுவதுடன் கல்விச் சமூகமயமாக்கல் செயன்முறையும் விருத்தி செய்யப்படும்.
- அதிபர் உரிய வளவாளரை வெளியிலிருந்து வரவழைத்து பாடசாலை மட்டத்தில் பாலியல் கல்வி தொடர்பான பூரண அறிவை மாணவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். இதன் போது பாலியல் கல்வி பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வதோடு அதனால் ஏற்படும் அச்சுறுத்தல்களிலிருந்து விடுபடவும் அதிலிருந்து பாதுகாப்பு பெறவும் முடியுமாக இருக்கும். இதனால் மாணவர்களிடையே ஏற்படும் பாலியல் ரீதியான பிரச்சினைகள், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற குற்றச் செயல்கள் குறைய வாய்ப்பேற்படும்.
- மாணவர்களுக்கு முறையான தலைமைத்துவப் பயிற்சிகளை பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பது அவசியம். இதனால் தலைவர் ஒருவருக்குரிய பண்புகள் பற்றி அறியவும், அவரின் பொறுப்புக்கள் பற்றி அறிந்து செயற்படவும் இது துணையாக அமையும் என்பதோடு தலைமைத்துவத்தினால் மாணவர்களிடையே ஏற்படும் பாரபட்சம் காட்டுதல் என்னும் பண்பு நீங்கவும் இது உதவியாக அமையும். இதனால் சமவயதுக்குழுக்களிடையே ஏற்படும் பிளவுகள் குறைவடைந்து அவர்களின் தொடர்புகளை வலுப்படுத்துவதாக அமையும்.
- புல்னிங் எக்கெல்ஸ் (1993) *என்பவர்* இளம் பருவ வயதினரை ஏற்றுக் கொள்வதற்கும், புகழ்பெற்றுக் கொள்வதற்கும் அதிக கவனம் செலுத்துவதுடன் அவர்களது சகாக்களுக்கு அடிக்கடி ஆலோசனையும் ஆறுதலையும் அளிப்பது முக்கியமாகும். அதாவது இளம் பருவத்தினர் எதிர்கொள்ளும் மனவெழுச்சி சிக்கல்களை தீர்ப்பதற்கும், தீய செயல்களைத் தவிர்த்து நல்ல செயல்களில் ஈடுபடவும் வழிகாட்டும் ஒன்றாக இது காணப்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே இவரின் கூற்றின் படி சமவயதுக் குழுக்களின் மனவெழுச்சிச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பங்களிப்பு செய்வது முக்கியமானதாகும்.

**முடிவுரை**

**"கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களின் செல்வாக்கு - புத்தளம் தெற்கு கோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு"** என்ற ஆய்வின் முடிவாக எனது ஆய்வின் முடிவின் படி கட்டிளமைப் பருவ மாணவர்களின் கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படுகிறது. அவ்வாறே மாணவர்களிடையே சமவயதுக்குழுக்கள் சம அளவில் சாதகமான விளைவுகளையும் பாதகாமான விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர். அதிகமான மாணவர்கள் தமது நண்பர்களுடனே தமது அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் குழுவாக இணைந்து கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் அவர்களிடையே குழு உணர்வும் கற்றல் ஊக்கமும் அதிகரித்துள்ள நிலையைக் கண்டறிய

முடிந்தது. அவ்வாறே அதிகமான மாணவர்கள் தமது சமவயதுக்குழுவினரால் உள ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ளக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். மேலும் நண்பர்களோடு இணைந்து தமது நேரத்தை சினிமா நிகழ்ச்சிகளிலும், online விளையாட்டுக்களிலும் கழிக்கும் நிலையும் காணப்படுகிறது. இதனால் நண்பர்களுடன் இணைந்து தீய செயல்களுக்கு அடிமையாகக் கூடிய நிலை ஏற்படுகின்றது. ஆகவே பாடசாலைகள் கட்டிளமைப் பருவ மாணவர்களுக்கு போதிய தலைமைத்துவப் பயிற்சிகளையும், விழிப்புணர்வு செயற்றிட்டங்களையும் பாடசாலை மட்டத்தில் பொருத்தமான வளவாளரைக் கொண்டு முழுமையாக செயற்படக் கூடிய வகையில் ஒழுங்கமைப்பது அவசியமாகும். எனவே மாணவர்களை போதிய கல்விச் சமூகமயமாக்கத்திற்குட்பட்ட நற்பிரஜைகளாக சமூகத்திற்கு அர்ப்பணிப்புள்ளவர்களாக உருவாக்குவதற்கு இது அவசியமாக உள்ளது.

**உசாத்துணைகள்**


1. கேவின் எல். ஏ, பர்மன் டப், (1989). இளம் பருவத்தினரின் வயது வித்தியாசங்கள் மற்றும் சமவயதுக் குழுக்களின் கருத்துக்கள், மேம்பாட்டு உளவியல் இதழ் 25.
2. Abdul Muhmin, A.G, (1998). Demographic differences in usage and attitudes toward the Saudi Arabian EFTPoS system, *International Journal of Banking Marketing*, pp. 117 28.
3. Allen. J, P. weissberg, R. P, & Hawkins, J.A. (1989). The Relation Between Values And Social Comptetence in Early Adolescents, *Department Of Pshycology* 25-458.-464.
4. Akers, R.L., Krohn, M.D., LanzaKaduce, L. and Radosevich, M. (1979). Social learning and deviant behavior: a specific test of a general theory , *American Sociological Review*, pp. 636 -55
5. Al Habeeb, T.A, and Qureshi, N.A, (2000). Smoking among male psychiatric outpatients in Saudi Arabia , *Annals of Saudi Medicine*, pp. 218- 23
6. Brian Krauth, (2005). Structural Estimation of Peer Effects in Youth Smoking, in Björn Lindgren, Michael Grossman, Substance Use: *Individual Behaviour, Social Interactions, Markets and Politics, Emerald Group Publishing Limited*, pp.201 – 211.
7. Chassin, L., Presson, C.C., Sherman, S.J., Montello, D. and McGrew, J. (1986). Changes in peer and parent influence during adolescence: longitudinal versus cross-sectional perspectives on smoking initiation, *Developmental Psychology*, pp. 327- 34.
8. Childers, T.L. and Rao, A.R. (1992). "The influence of familial and peer- based reference groups on consumer decisions", *Journal of Consumer Research*, Vol. 19 No. 2, pp. 198- 211.

9. David Pearce Snyder, (2006). From higher education to longer, fuller, further education: the coming metamorphosis of the university. On the Horizon 43-61.
10. David Pearce Snyder Bethesda, Peer mentoring: the challenges and opportunities Linda Holbeche Director of Research, *Roffey Park Management Institute*, Horsham, UK.
11. Douglas, T. Hall, Kathy E. Kram, (2008) . Peer Coaching: A Relational Process for Accelerating Career Learning. Academy of Management Learning & Education.
12. Elina Stamou, (2014). Reclaiming user leadership in peer support practice, *The Journal of Mental Health Training, Education and Practice*, pp.167-176.
13. John Moriarty, Kathryn Higgins, (2015). "Effects of peer network interactions on adolescent cannabis use*", Journal of Criminal Psychology,* pp.75-91,
14. Kiuru, N. Aunoja, k., vuori, J &Nurmi J-E. (2007). The Role of Peer Groups In Adolescents' *Educational Expactations And Adjustment. Journal Youth of Adolescents*
15. Noonakiuru,( 2008). The Role Of Adolescents' Peer Groups In The School Context, University of Jyvaskyla .